தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், காட்டுக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:– திரு.சி.அன்பழகன்,

0/0/0/0/0

காட்டுக்கோட்டை ஊராட்சி
தலைவாசல் வட்டம்
சேலம் மாவட்டம்
636 121
தலைவாசல் ஒன்றியம்

ந.க.எண். 12/2023/அ1 நாள்:20.02.2024.

பொருள் :– மனைப்பிரிவு – தலைவாசல் ஊராட்சி ஒன்றியம் – காட்டுக்கோட்டை ஊராட்சி – திரு.ஸ்ரீதர் த/பெ.நடராஜன், 110/1 முத்து நகர், முத்துமலை முருகன் கோவில் ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம் என்பவர் காட்டுக்கோட்டை ஊராட்சியில் ச.எண்.294/4B, 296/7B1, 440/1, 440/2, 440/3 மற்றும் 440/4Bல் 8.1816 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்று, சந்தா தொகை செலுத்தப்பட்டது – வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் ஊராட்சி மன்ற ஒப்புதல் வழங்க கோரியது – மனைபிரிவிற்கு ஊராட்சி மன்ற ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் – சார்பு

பார்வை

1. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD(4(3) துறை நாள்.04.05.2017.
2. அரசாணை நிலை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD(4(3) துறை நாள்.13.10.2017.
3. அரசாணை நிலை எண்.21, வீட்டு வசதி மற்றும் நகர்வுற வளர்ச்சித் (UD(4(3) துறை நாள்.05.02.2019.
4. அரசாணை நிலை எண்.118, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (நவ4(1) துறை நாள்.04.09.2023.
5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் ந.க.எண்.SLM/ZGC6HUFE–12817/2023/TCP நாள்.01.12.2023.
6. ஆத்தூர் சார்பதிவாளர் அவர்களது ந.க.எண்.2/2024–4 நாள்.02.02.2024.
7. திரு.ஸ்ரீதர் த/பெ.நடராஜன், 110/1 முத்து நகர், முத்துமலை முருகன் கோவில் ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம்
8. வங்கி சலான் நாள்.09.02.2024
9. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், தலைவாசல் அவர்களின் ந.க.எண்.335/2024/தி2 நாள்.13.02.2024.
10. காட்டுக்கோட்டை ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.110/2023–2024 நாள்.19.02.2024.

0/0/0/0/0

உத்திரவு

தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், காட்டுக்கோட்டை ஊராட்சியில் திரு.ஸ்ரீதர் த/பெ.நடராஜன், 110/1 முத்து நகர், முத்துமலை முருகன் கோவில் ஏத்தாப்பூர், சேலம் மாவட்டம் என்பவர் ச.எண்.294/4B, 296/7B1, 440/1, 440/2, 440/3 மற்றும் 440/4Bல் மொத்தம் 8.1816 ஏக்கர் பரப்பில் உள்ள மனை நிலத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு பார்வை 7ல் காணும் விண்ணப்பத்தில்

தெரிவித்துள்ளார்கள். பார்வை 5ல் கண்டுள்ள கடிதத்தில் நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் சேலம் அவர்களால் மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள மனை பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும் பார்வை 1 முதல் 4ன்படி திட்டமில்லா பகுதி அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3ன்படி கூராய்வு கட்டணம் ரூ.1000/—ம் மற்றும் விதி எண்.9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3 சதவீதம் தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணம் கீழ்கண்ட விபரப்படி அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்து.

பார்வை 9ல் காணும் கடிதத்தின்படி, காட்டுக் கோட்டை ஊராட்சி ச.எண்.294/4B, 296/7B1, 440/1, 440/2, 440/3 மற்றும் 440/4Bல் 8.1816 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான ஊராட்சி மன்றத் தீர்மானம் வழங்க தலைவாசல் ஊராட்சி ஒன்றிய, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் தெரிவிக்கப்பட்டதன்படி, பார்வை 10ன்படி ஊராட்சி மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மன்ற தீர்மானம் அளிக்கப்பட்டுள்ளது.

ஏனவே, கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட மனை பிரிவிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்டு சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனை பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

2. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் மனைப் பிரிவிற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்பும் இன்றி இரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. நிலம் தொடர்பாக ஏதோனும் பிரச்சனைகள் பின்னர் தெரியவந்தால் எவ்வித முன்னறிவுப்பும் இன்றி வரைபட அனுமதி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

4. நில உரிமை தொடர்பான விபரங்களை மனைப்பிரிவு வாங்குபவர்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இதில் தவறுகள் வில்லங்கம் ஏதும் இருப்பின் இத்துறை பொருப்போற்காது.

5. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கழிவு நீர் கால்வாய், தார் சாலை பணிகள், தெருவிளக்கு வசதிகள், மற்றும் உறிஞ்சுக்குழி முழுமையாக முடித்து 30 நாட்களுக்குள் அதற்கான புகைப்படத்தை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பணிகள் 30 நாட்களுக்குள் முடிக்க தவறும் பட்சத்தில் மனைப்பிரிவு வழங்கப்பட்ட ஒப்புதல் ரத்து செய்ய நேரிடும்.

6. மனைப்பிரிவில் குறுக்கோ செல்லும் மின்சார கம்பிகள் உரிய வகையில் மாற்றியமைத்து ஆவணம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

7. மனைப்பிரிவிற்கான விளம்பர பலகை வைத்து அதற்கான புகைப்படம் சமர்ப்பிக்பட வேண்டும்.

21/2/24

தலைவர்,
காட்டுக்கோட்டை ஊராட்சி,
தலைவாசல் ஊராட்சி ஒன்றியம்.

20/02/24

பெறுதல்
திரு.ஸ்ரீதர்,
த/பெ.நடராஜன்,
110/1 முத்து நகர்,
முத்துமலை முருகன் கோவில், ஏத்தாப்பூர்,
சேலம் மாவட்டம்

நகல்
1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், தலைவாசல் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சார்பதிவாளர், ஆத்தூர், சேலம் மாவட்டம்.
4. தலைவர், காட்டுக்கோட்டை ஊராட்சி, தலைவாசல்